செய்தி வெளியீடு எண்:336/2018 நாள்: 11.06.2018

**ஒருங்கிணைந்த நிதி மற்றும் மினத வள மேலாண்மைத் திட்டத்தின் திறனூட்டல் பயிற்சிக் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.**

வேலூர் தந்தை பெரியார் அரசு தகவல் மற்றும் தொழிற்நுட்ப மையத்தில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தின் திறனூட்டல் பயிற்சிக் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, மாநில அரசு நிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனித வள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் கருவூலம் கணக்குத்துறையினால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலை தள சம்பளப்பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின் மூலம் சம்பளப்பட்டியல் மற்றும் இதர பட்டியல்களை கருவூலத்தில் சமர்பிக்க இயலும். மேலும் இத்திட்டத்தில் அரசின் வருவாயினை இணையவழி மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும்.

இத்திட்டம் அக்டோபர் 2018 முதல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அரசுப் பணியில் சேர்ந்தது முதல் ஓய்வு பெறும் வரை உள்ள அரசுப் பணியாளர்களின் பணி வரலாறானது முழுமையாக இத்திட்டத்தின் மூலம் கணினிமயமாகிறது. இத்திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த, நான்கு நாட்கள் பயிற்சி சில பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும், கூடுதலாக இரண்டு நாட்கள் பயிற்சி கருவூல துறை அலுவலர்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியில் கீழ் சம்பளம் மற்றும் சம்பளம் சாரா பட்டியல்கள் தயாரித்தல், மின் பணிப்பதிவேடு பராமரித்தல், ஓய்வூதிய கருத்துருக்கள் தயாரித்தல் மற்றும் இதர இனங்கள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மேலும் பட்டியல் கடவு செய்தல், காப்பறை செயல்பாடுகள், முத்திரைத்தாட்கள் மேலாண்மை, மின் அலுவலகம், ஓய்வூதிய வழங்கல் மற்றும் இதர இனங்கள் குறித்து கருவூலத்துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பகலவன், இ.கா.ப., மாவட்ட வன அலுவலர் திரு.முருகன், இ.வ.ப., மண்டல இணை இயக்குநர் (கருவூலம் மற்றும் கணக்குத் துறை) திருமதி.புவனேஸ்வரி, மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.புஷ்பா, தந்தை பெரியார் அரசு தகவல் மற்றும் தொழில்நுட்ப மைய முதல்வர் திரு.குமார் மற்றும் அனைத்துத் துறை பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.